

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.9.2023) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம், ஏ.ஜி.பாலமுருகன், பாண்டிமதி துரைராஜ் ஆகியோர் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி அமெரிக்க நாட்டின் நியூஜெர்ஸி மாநிலத்தில் உள்ள ஃபிராங்கிளின் நகரியத்தின் வாழ்த்துப் பிரகடனத்தை (New Jersey, Franklin Township Proclamation) அளித்தார்கள்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (05.09.2023) சென்னையில் நடைபெற்ற தேசிய ஆயுஷ் மண்டல ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர் சர்பானந்தா சோனாவால் அவர்களிடம் தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை தொடர்பான கோரிக்கைகளை வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய அரசு ஆயுஷ்துறை இணை அமைச்சர் டாக்டர்.முஞ்சரப்பா மஹேந்திரபாய், கர்நாடகா மாநிலம் சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ்குண்டுராவ், ஒன்றிய அரசு ஆயுஷ்துறை செயலாளர் ராஜேஷ் கோட்டச்சே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஒன்றிய ஆயுஷ் இணை செயலாளர் திருமதி.கவிதா கார்க், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி கே.இராஜேந்திரன் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர் செப்,7-

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சீராநத்தம், நொச்சிக்குளம், திம்மூர், கொளத்தூர், கூடலூர், குரும்பாபாளையம், தெரணி, அயினாபுரம், கொளக்காநத்தம் ஆகிய கிராமங்களில் ரூ. 6.37 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாடு, நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்துதல், சிமெண்ட் களம் அமைத்தல் போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்.

மேலும் இரசுலாபுரம் ஊராட்சியில் ரூ.6.14 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மக்களின் கோரிக்கைகள் அனைத்தும் உடனுக்குடன் நிறை வேற்றப்பட்டு வருகின்றது. பெரம்பலூர் மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணிலடங்கா திட்டங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள்.

அதனடிப்படையில், சீராநத்தம் ஊராட்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ரூ. 51,00,000 மதிப்பீட்டில் அல்லிநகரம் முதல் கூத்தூர் வரை செல்லும் சாலையினை மேம்படுத்தும் பணி, நொச்சிக்குளம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.10,35,148 மதிப்பீட்டில் செட்டி ஏரி தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல் பணி, நொச்சிக்குளம் கிழக்குத் தெருவில் ரூ.9,62,624 மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, ரூ.9,60,000 மதிப்பீட்டில் கழிவுநீர் வாய்க்காலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, ஆதிதிராவிடர் தெருவில் ரூ.4,80,000 மதிப்பீட்டில் கழிவுநீர் வாய்க்காலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி,

திம்மூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10,42,022 மதிப்பீட்டில் திம்மூர் ஊராட்சி பெரிய ஏரி தூர் வாரி ஆழப்படுத்துதல், திம்மூர் ஆதிதிராவிடர் தெருவில் ரூ.3,60,000 மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல், திம்மூர் ஊராட்சியில் ரூ.9,10,000 மதிப்பீட்டில் சிமெண்ட் களம் அமைத்தல், கொளத்தூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.11,15,604 மதிப்பீட்டில் கொளத்தூர் குடிநீர் ஏரி தூர் வாரி தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் படித்துறை கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் கொளக்காநத்தம் ஊராட்சியில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.84,44,000 மதிப்பீட்டில் கொளக்காநத்தம் கருடமங்கலம் செல்லும் சாலையை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல், கொளக்காநத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50,00,000 மதிப்பீட்டில் வட்டார அளவிலான சுகாதார மையம் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும் இரசுலாபுரம் ஊராட்சியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் நபார்டு திட்டத்தின்கீழ் புஜங்கராய நல்லூர் இரசுலாபுரம் இடையே மருதையாற்றின் குறுக்கே ரூ.6,13,95,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய அடித்தட்டு மக்களுக்கான தேவை அறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய பொற்கால ஆட்சி.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குரும்பாபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சாப்பிட்டு பார்த்து ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் கலைவாணி, ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பூங்கொடி , இமயவரம்பன், வட்டாட்சியர் முத்துக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### எஸ்.சந்தோஷ் ஏற்பாட்டில்! திருமருகல் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த

# அ.தி.மு.க. - பா.ஜ.க.வினர் 300 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## என்.கௌதமன் – செல்வ.செங்குட்டுவன் முன்னிலையில்!

நாகை. செப்.7

நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் அ.தி.மு.க. - பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 300 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அக்கட்சிகளில் இருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பணங்குடியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருமருகல் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வ. செங்குட்டுவன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளருமான எஸ். சந்தோஷ் வரவேற்றார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, திட்டச்சேர் பேரூர் கழகச் செயலாளர் முகமது சுல்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. - பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 300 குடும்பத்தை சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு என்.கௌதமன் இரு வண்ண கைத்தறி ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஆர்.பன்னீர்செல்வம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, நாகை நகர பொருளாளர் அபுபக்கர், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் கல்யாணம், சரவணன், துணைத் தலைவர் கேப்ஸ்ரவி, மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் ஜெயலெட்சுமிமணிவண்ணன், திருமருகல் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் ஆர். செந்தில்குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் அஞ்சாநெடுமாறன், சுமதிமணி மாறன், ஒன்றிய பொருளாளர் ஒன்றிய குழு உறுப்பினர்கள் வினோதினிகாத்திக், பேபி, ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன், ஹாஜா, ஜமுனா, மாவட்ட ஆதிதிராவிடக்குழு துணை அமைப்பாளர் மதியழகன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் அசோக், அயலக அணி துணைத்தலைவர் விஜி, ஜெயலட்சுமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஆர்,எம்.தனபால், உறுப்பினர்கள் புவனேஷ்வரி ரமேஷ், பாலமுருகன், லேகினி, பிரசாத், நாகை நகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ஆர்.ஏ . ரத்தினவேல், முன்னாள் துணை அமைப்பாளர் சுந்தர், ஒன்றிய மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் பெருமாள், செல்வமணி, அறிவழகன், கிளை செயலாளர்கள் மணிமாறன், பி.கார்திக், பால்ராஜ், தங்கமணி, அன்பழகன், ஒன்றிய பிரதிநிகள் பழனிவேல், கதிரவன், ராஜ்குமார், சிவலிங்கம், தியாகு, கலாராணி, சந்திரசேகர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் விவேகானந்தம், ஜெயக்குமார், ஜெயபால், குமரவேல், ராம்குமார், குணசேகரன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### இதுவரை ரூ.5 கோடியே 77 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மருத்துவம் - கல்வி உதவி நிதியாக

## இன்று ரூ.8,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 77 லட்சத்து 90 ஆயிரம்**. தற்போது நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 32 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.8,00,000** /- (எட்டு லட்சம்) **05-09-2023** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | விஜயபாண்டியன், ஜீவா நகர் 1வது தெரு, மதுரை 625 011 | 25,000/– |
| 2. | எஸ்.சி.சந்திரன், செம்மாண்டபாளையம் கிளைச் செயலாளர், ஈரோடு தெற்கு | 25,000/– |
| 3. | ஏ.மணி, வேளூர் அஞ்சல், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் 614 715. | 25,000/– |
| 4. | ஜி. ரமேஷ், சித்திபுத்தி விநாயகர் கோவில் தெரு, கடம்பத்தூர், திருவள்ளூர் | 25,000/– |
| 5. | எம். ஞானராஜ், ஒன்றிய பிரதிநிதி, பெட்டைக்குளம், திருநெல்வேலி கிழக்கு. | 25,000/– |
| 6. | எம். ராமர், வேப்பங்குளம் கிளைச் செயலாளர்,குருவிகுளம், தென்காசி வடக்கு. | 25,000/– |
| 7. | பி. ராமசாமி, கிளைச் செயலாளர் எ.பாதர்பேட்டை, துறையூர், திருச்சி | 25,000/– |
| 8. | எஸ்.குழந்தைவேலு, பட்டிமார், கோட்டூர், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் | 25,000/– |
| 9. | நா.தங்கம்மாள், பகளவாடி, காமாட்சி கோவில் தெரு, துறையூர், திருச்சி | 25,000/– |
| 10. | எஸ்.வீரப்பன், 17வது வார்டு செயலாளர், பள்ளிபாளையம், நாமக்கல் | 25,000/– |
| 11. | கா.காணப்பன், மேல் தெரு, மெணசி அஞ்சல், பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி | 25,000/– |
| 12. | ஜே.ஜாகீர்உசேன், கணேஷா காலனி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி | 25,000/– |
| 13. | சி. பொன்னிங்கிரி, குப்புசாமி வீதி, கள்ளிமடை, சிங்காநல்லூர், கோவை | 25,000/– |
| 14. | எஸ்.ரவி, மன்னாதம்பாளையம், மொடக்குறிச்சி, ஈரோடு | 25,000/– |
| 15. | எஸ்.ராஜம்மாள், ராஜவீதி, அரசூர், சத்தியமங்கலம், ஈரோடு | 25,000/– |
| 16. | அ.கா. அன்வர்கான், கந்தசாமி வீதி, ஈரோடு | 25,000/– |
| 17. | கே.செல்வராஜ், காளிபாளையம், தாராபுரம் தாலுகா, திருப்பூர் | 25,000/– |
| 18. | என்.ராஜேந்திரன், தவிட்டுமேடு, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் | 25,000/– |
| 19. | இரா.திராவிடமணி, ஒலிமடவு கிராமம், கொளப்பள்ளி, பந்தலூர், நீலகிரி | 25,000/– |
| 20. | க.சரோஜா, நத்தம் காலனி ரோடு, பந்தலூர் அஞ்சல், நீலகிரி | 25,000/– |
| 21. | ஏ. கிட்ணசாமி, நெல்லியாளம் தேயிலை தோட்டம், கொளப்பள்ளி, நீலகிரி | 25,000/– |
| 22. | பி. ரவி, எண்.6/10, மசக்கல் மற்றும் அஞ்சல், நீலகிரி | 25,000/– |
| 23. | வி.மனோகரன், கிளை அவைத்தலைவர், ஏர்குடிஅச்சம்பத்து,மதுரை | 25,000/– |
| 24. | ம.கருப்பையா (எ) கலைப்பித்தன், வ.உ.சி.நகர், திருப்பாலை, மதுரை14. | 25,000/– |
| 25. | பெரியகருப்பன், மேலப்பூசனூத்து, கடமலைமயிலாடும்பாறை,தேனி | 25,000/– |
| 26. | ஆர்.வெள்ளத்துரைபாண்டியன்,5வது வார்டு, சின்ன ஓவுலாபுரம்,தேனி. | 25,000/– |
| 27. | டபிள்யூ. சர்மாவில்லியம், முருகப்பா நகர், சூளைமேடு,சென்னை94. | 25,000/– |
| 28. | சே.நவாஸ்அலி, காயிதே மில்லத் நகர், புதுவலசை,இராமநாதபுரம் | 25,000/– |
| 29. | க.கர்ணன், கிளைச் செயலாளர், விரதக்குளம், கமுதி, இராமநாதபுரம் | 25,000/– |
| 30. | வி.ஆர்.அலர்மேல்மங்கை, பேரண்டம்மாள் தெரு, சிவகாசி,விருதுநகர் | 25,000/– |
| 31. | கு.க.கோட்டியப்பன், நேத்தாஜி நகர், சங்கரன் கோவில்,தென்காசி | 25,000/– |
| 32. | அ.கல்வத்பீவீ, ஆலீம்ஷா தெரு, தெற்குபகுதி, கடையநல்லூர்,தென்காசி | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.8,00,000/-** |